# மெட்ரோ ரெயில் சேவை மீண்டும் தொடக்கம்

சென்னை, நவ.27–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் நிவர் புயல் கரையை கடக்க இருந்ததையொட்டி நேற்று முன்தினம் இரவு 7 மணியோடு அனைத்து சேவைகளையும் நிறுத்தியது. மழை குறைந்ததும் நேற்று பகல் 12 மணி அளவில் மெட்ரோ ரெயில் சேவை மீண்டும் தொடங்கியது. விடுமுறை கால அட்டவணைப்படி சேவை நடந்தது. பகல் பொழுதில் சேவை தொடங்கியதால் பொதுமக்கள் குறைந்த அளவிலேயே ரெயிலில் பயணம் செய்தனர்.